RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd223S136

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# The Importance of Education and the Evolution of Teaching in the Modern Era

## கல்வியின் மகத்துவம் சம கால சூழ்நிலையில் கற்பித்தலில் மாற்றம்

**L. Joan Sylvia prema** [a,*]

[a] Department of Tamil Language, St Anne`s Art and Science college Chennai-600110, Tamil Nadu, India.

*Corresponding author Email: Joansylviaprema5@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S136

Received: 13-04-2022; Revised: 30-07-2022; Accepted: 04-08-2022; Published: 20-08-2022

**Abstract:** Education is the main factor in all human activities. Education is an invaluable key factor in all aspects of individual social and environmental change. In this context, giving importance to education is essential. Education is the true yardstick for measuring a country's resilience internationally. Education travels throughout the life of the individual. But when they learn in childhood, they become fully mature and become complete human beings so as to contribute to society. In present times, education is taught to students in many new ways. Education is the eternal wealth that people need. Education is about creating the right environment and bringing out the innate qualities of human beings. In today's age, education is taught through the internet, which is taught as clearly as a bell from the palm. Currently, the education system is conducted through the internet.

**Keywords:** Environmental, Criterion, Emphasis, Essential, Stability

**Language:** Tamil

---

## முன்னுரை

தத்துவார்த்த அனுபவங்களை தேடிக் கற்பதே கல்வி என்பர் அறிஞர்கள். உலகில் பிறந்த மனிதன் தன் அனுபவங்களைத் தொகுத்து தனக்குப் பின்வரும் சமுதாயத்திற்கு விட்டுச் செல்கின்றான். ஒருவனின் அனுபவம் மற்றவனின் வாழ்க்கை எனவே, அத்தகைய அனுபவங்களை நூல்வாயிலாகவோ, குலத்தொழிலின் வாயிலாகவோ பிறனின் அறிவுரை வாயிலாகவோ அறிந்து கொள்வதுதான் கல்வியாகும். அறிவின் அடிப்படைகளாக அமைபவை புலன் அனுபவங்களே. ஐம்புலன்கள் அறிவியல் நுழை வாயில்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நுழைவாயில்களைத் தக்கமுறையில் பயன் படுத்தி வாழ்வில் நெறிக்குத் தேவையான உண்மைகளை உணர்ந்து நடப்பது தான் கற்றலின் பயனாகும்.

"ஒளிப்படைத்த கண்ணினாய் வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
தெளிமை பெற்ற மதியினாய் வா வா வா"

என அறிவொளி ஏந்திக் கொண்டு உறுதியோடு வாழ அழைக்கின்றார் பாரதி (Rajaseakaren, 2007).

## கல்வி விளக்கம்

கல்வியின் நோக்கமான அறிவியல் மனப்பான்மை, கற்பனைத்திறன், படைப்பாற்றல் தன்னம்பிக்கை, மற்றும் ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதே கல்வியின் முக்கியமாகும்.

கல்வி என்ற தமிழ்ச் சொல் கல் (ஆய்வு செய்) என்ற வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது. கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல் (Education) என்பதாகும் இந்த சொல் (educatio) என்ற இலத்தீன் மொழி சொல்லிருந்து பெறப்பட்டதாகும். (educatio) சொல்லானது வளர்த்தல் என்ற பொருளைக் குறிக்கிறது. இது கற்பித்தல், பயிற்றுவித்தல் என்னும் பொருளைத் தரும். கல்வி என்பது புறத்திலிருந்து நம் அகத்திற்கு செல்வது ஐம்புலன்களாகிய உடம்பிலுள்ள அறியும் கருவிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) வெளியிலிருந்து செய்திகள் உள்ளே செல்கின்றன என்பதனை உணரச்செய்வதாகும்.

## ஞானத்தின் வேர்

பிறரின் மெய்யான அறிவினைக் கற்றலே கல்வி என்பர். ஒருவன் தனக்குக் கொடுக்கப்பட்ட அறிவின் மூலம் கற்று அதனை அனுபவத்தோடு குழைத்து ஞானத்தை அடைய வேண்டும். எனவே அனுபவக் கல்வியினைக் கற்பதுதான் கல்வி என்றாகிறது. கல்வி என்பது ஒரு சமூகம் தன்னுடைய இளைய தலைமுறையினருக்குத் தன்னுடைய மரபுகள் வழக்கங்கள் விழுமியங்கள் முதலியவற்றை செலுத்த முயலும் செயற்பாங்கு ஆகும்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன்"

கல்வி என்பது ஒரு சமூகத்தில் அதனுடைய பண்பாடு ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குச் செலுத்தப்படும் செயற்பாங்கு எனலாம்.

## பழங்கால உலகளாவிய கல்வி வளர்ச்சி முறைகள்

பண்டையக் காலங்களில் மக்கள் ஒருவருக்கொருவர் பார்த்துப் பழகியும், பேச்சு வழக்கில் கதைகள் சொல்லியும் கேட்டும் அறிவை வளர்த்துக் கொண்டனர்.

இந்தப் பின்னனியில் இருந்து கல்வி முறைகள் உருவாயின. கி.மு.2055-இல் எகிப்தில் பள்ளிக்கூடங்கள் இருந்தன. பிளேட்டோ கிரேகத்தில் உள்ள ஏதேன்சு நகரத்தில் கி.மு.387-ல் கல்விக்கூடம் ஒன்றை நிறுவினார். அரிஸ்டாட்டில் (கி.மு.384-கி.மு.322) இங்கு இருபது ஆண்டுக் காலம் பயின்றார். இந்தக் கல்விக் கூடம் தான் ஐரோப்பியாவின் முதல் கல்வி கூடம் ஆகும். சீனாவில் கன்பூசியஸ் (கி. மு 551) பரப்பி வந்த கருத்துகள் இன்று வரை சீனா, கொரியா, ஜப்பான், வியாட்நாம், ஆகிய நாடுகளில் பின்பற்றப்படுகின்றன.

பொற்காலம் என்று பெருமையுடன் போற்ற பெறுகின்ற சங்க கால நூல்கள் அனைத்தும் நம் மூதாதையாரான புலவர் பெருமக்கள் நமக்களித்த பெருங்கொடையாகும் (Thamillamuthu, 2009). அப் பொற்காலத்தில் தமிழர் வாழ்வில் புலமை நலம் மிக்கவர்களாகப் ஆண்களுக்கு நிகராக பெண்களும் சிறந்து விளங்கினர். சங்க காலத்துப் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சிறந்து விளங்குவதற்குக் காரணம், அக் காலத்தில் பெண் கல்வி மிகவும் உயர்ந்த நிலையில் இருந்ததையும் சாதி ஏற்றத் தாழ்வில்லாமல் அனைவருக்கும் கல்வி கற்றதையும் பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்கள் மூலம் கல்வியில் சிறந்து விளங்குவதை அறியலாம்.

சமண, பௌத்த, மதத்தினர் தம் பள்ளிகளில் இருந்து கொண்டு கல்வியளித்தனர் இதனாலேயே பள்ளி என்னும் சொல் கல்வி நிலையத்தை குறிப்பதாயிற்று. கால மாற்றத்தினால் ஆங்கிலேயர் காலத்தினால் தான் முறையான பள்ளிகள் தோன்றி புத்துலக கல்வி அறிவினைக் மக்களுக்கு அளித்தனர்.

## சான்றோர்களின் பொன்மொழிகள்

- ❖ கற்காமல் இருப்பதை விட, பிறக்காமல் இருப்பதே நல்லது, ஏனெனில் அறியாமை தான் தீவினையின் மூலவேர் "பிளட்டோ"
- ❖ வாழ்க்கை அனுபவமில்லாத, எவரும் கல்வி கற்றவராக முடியாது. "பெர்னாட்ஷா"

- ஒழுக்கம் உண்டாக்காத இலக்கியக் கல்வியால் ஒரு வித உபயோகமும் கிடையாது. "காந்தியடிகள்"
- கல்வி என்பது உலகில் நல்வாழ்க்கை வாழ தகுதியுடையவனாக்குவதாகும் "ஈ.வே. ரா"
- ஆயிரம் கோயில்கள் கட்டுவதை விட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது சிறந்தது "மகாகவி பாரதி".

## அழியாத செல்வம்

கல்வி என்பதற்கு நாலடி சிறந்த விளக்கத்தினை தருகிறது. எந்தப் பொருள் இப்பிறவியில் நன்மையினைக் கொடுக்கின்றதோ, கொடுத்தால் குறையாததோ தம்மை அறிவிலும் புகழாலும் விளங்கச் செய்யுமோ கெடுதல் இல்லையோ அப்பொருள் கல்வியாகும்.

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்

தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்

எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்"

கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும், பிறருக்குத் தருவதால் குறையாது (Tamil Amuthu, 2009). (கற்றவர்) புகழை எங்கும் பரவச் செய்யும் (தாம்) உயிரோடு இருக்கும் வரை அழியாதது. இக் கல்வியினால் பிறவிப் பயன் மற்றும் பேரின்ப வாழ்வினையும் அடையலாம் என்பது நாலடி புலவர்களின் கருத்தாகும். இதனையே திருக்குறளும்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றை யவை" (குறள்.400)

நாம் தேட வேண்டிய பெருஞ்செல்வம் அழியாதக் கல்வி செல்வமே மற்ற செல்வங்களோ செல்கின்ற செல்வங்களேயன்றி வேறுயில்லை என்கிறார் வள்ளுவர்.

"பற்பல நாளும்பழுது இன்றிப் பாங்கு உடைய

கற்றலின் காழ் இனியது இல்"

பல நாட்களும் நன்மையைத் தரும் நூல்களைக் கற்பதைப் போல இனிதான செயல் வேறொன்றும் இல்லை என்று இனியவை நாற்பது பாடல் தெரிவிக்கின்றது (Sithamparanar sami, 2003).

## கற்றவரின் தன்மை

நல்ல கல்வி உடையவரின் தன்மை சிறந்ததாய் இருக்கும் கேள்வி உடையவரின் தன்மை சிறந்தவராய் இருக்கும். அவருடைய நட்பானது கரும்பினை நுனியில் இருந்து அடிவரை திண்பது போல் போக போகப் இனிமையாக இருக்கும்

"கனைகடல் தன் சேர்ப்பர் கற்றறிந்தார் கேண்மை

நுனியின் கரும்புதின் ற்றறே - நுனிநீக்கி

கற்றது உடைமை காட்சியின் அறிப" (Tamil Amuthu, 2009)

"கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே

மிக்காரைச் சேர்தல் மிக மாணமுன் இனிதே

எத்துணையும் ஆற்ற இனிது"

"பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்". என்னும் பழமொழி இங்கு எண்ணத்தக்கது. இம்மைப் பயனைக் கொடுக்கும் கல்வி அறியாமையைப் போக்கும் என்று நாலடியார் தம் பாடல் மூலம் எடுத்துரைக்கிறது (Subramaniyan, 2007).

## சம காலச் சூழலில் கல்வியின் முக்கியத்துவம்

உலகம் மிக வேகமான மாறி வருகின்றது அதனால் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற பழ மொழிக்கேற்ப பல்வேறு நாடுகள் பழைய கல்வி முறைகளை மாற்றியும் புதியக் கல்விக் கொள்கைகளை வகுத்தும். நடைமுறைகளை மாற்றியும் புதியக் கல்வி கொள்கைகளை வகுத்தும். நடைமுறையில் காணும் நிகழ்வுகளை வைத்து குழந்தைகளுக்கு அறிவு புகட்டப் படுகின்றது. கடந்த 20 ஆண்டுகளாக கல்வியை ஒருவருக்கு எவ்வாறு வழங்குவது (Learning modalities) என்பதில் பல மாற்றங்கள் நிகழ்ந்து உள்ளன. காட்சி வழிக்கல்வி (Visual learning) செவி வழிக்கல்வி (Auditory learning) செயல் வழிக் கல்வி (Kinesthetic learning) இத்துடன் இசை வழிக் கல்வி (Musical) மாந்தர் வழிக் கல்வி (Inter personal) சொல் வழிக் கல்வி (Verbal) ஏரணவழிக் கல்வி (Logical) கல்வி மற்றும் தனக்குள் நிகழும் Interpersonal கல்வி ஆகியவை பயன்பாட்டில் உள்ளன

கல்வி கற்க விரும்பும் மனிதன் தன் வீட்டிலேயே கற்கும் காலமும் வந்து விட்டது இணைய வசதிகொண்ட செல்பேசி மூலம் கூகுள் மீட், ஜீம் மீட் டிங் மூலம் கணினி வழியாக கல்வி மாணவர்கள் கற்கின்றனர் தனக்கு தேவையான புத்தகங்களை மாணவர்கள் மின் புத்தகங்களாக சேமிக்க முடிகிறது. இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு கூகுள் செயலி மூலம் கூகுள் கிளாஸ்ரும் இணைய வழியாக கல்வி இன்று உள்ளங்கை நெல்லிக் கனி போல கைக்குள் இருந்து கற்பிக்கப்படுகிறது. தற்போது கல்வி முறை இணையத்தின் வாயிலாக நடைப்பெறுகிறது.

## முடிவுரை

மாந்தர் தம் கற்றனைத்தூரும் அறிவு என்று வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறியாக கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். அவற்றுள் அறிவியற் கல்வி, சமூக அறிவியற் கல்வி, அழகியல் கல்வி ஆகிய மூன்று வாழ்க்கைக்கு அவசியமானவை. ஒருவனுக்கு பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமாகும். கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாகும். அறிவியலும் சமூகமும் வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு கருவியாகும். வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு அதற்கேற்ப கற்க வேண்டும் வாழ்க்கையை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும். கல்வி என்ற கருவியை பயன்படுத்த வேண்டும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தை பொருத்தவரை மிகவும் இழிவானதாகும். எனவே ஒருவன் கல்வி கற்றால் சமூகத்தினால் மதிக்கப்படுகிறான்.

## References

Rajaseakaren, (2007) Bharathiyar Kavithaigal, seetha Pathipagam, Chennai, India.

Sithamparanar sami, (2003) Pathenen Keelkanaku Thamilar Valvum, Aarivu Pathipagam, Chennai, India.

Subramaniyan, Sa.V., (2007) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

Thamillamuthu, (2009) Pathenen Keelkanaku 1.2, Palaya Uraiyasiriyargal, Manivasagar Pathippakkam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

L. Joan Sylvia prema, The Importance of Education and the Evolution of Teaching in the Modern Era, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 187-191. DOI: https://doi.org/10.54392/ijmrd223136